# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2018–ம் வருடம் பிப்ரவரி மாதம் 14 –ம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விவரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு

## பொருட்கள்

1) இந்நகராட்சியிலுள்ள 21 வார்டுகளிலும் வார்டு எல்கை மறு நிர்ணயம் செய்யக் கோரி வரப்பெற்ற உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறு சீரமைப்பு ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3174/2017/EG1, நாள் 19–10–2017, 10–11–2017, 24–11–2017, 06–12–2017 மற்றும் 19–12–2017–ம் தேதிகளில் குறிப்பிடப்பட்ட தெளிவுரைகளின் படியும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் எல்லை வரையறை ஆணைய விதிமுறைகள் 2017–ன் படியும் இந்நகராட்சியில் அடங்கியுள்ள 21 வார்டுகளின் எல்கையினை மறுவறையறை செய்யப்பட்டு அதற்கான வரைவு பிரேரணைக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1157, நாள் 19–12–2017–ன் படி அனுமதி பெறப்பட்டு மறுவரையறை ஆணையத்திலும் 29–12–2017–ம் தேதிய ந.க.எண்.3174/2017/தே.பொ 1–6 எண் கடிதத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டு பொது அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெளியீடு செய்யப்பட்டு அதன் வரைவு கருத்துருவுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு பொது மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளை கேட்டுக் கொள்ளப்பட்டு தினத்தந்தி, தினசரி நாளிதழிலும் , இவ்வலுவலக அறிவிப்பு பலகையிலும், அனைத்து அரசு துறை அலுவலகங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டதன் பேரில் இந்நகராட்சிக்கு ஆட்சேபனை கடிதங்கள் 9 எண்ணங்கள் வரப்பெற்றது. வரப்பெற்ற 9 ஆட்சேபனைகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லையாததலால் இந்நகராட்சி அலுவலகத்தில் 02–02–2018 தேதியில் நடைபெற்ற கருத்து கேட்புக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது. பின்னர் வார்டு மறுவரையறை தொடர்பாக 08–02–2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து வார்டு மறுவறையறை ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டத்தில் திரு. ஜோசப் என்பவர் மட்டும் ஆஜராகி தனது கருத்துக்களை தெரிவித்தார். திரு. ஜோசப் அவர்கள் தெரிவித்த ஆட்சேபனை விவரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வார்டு மறு வரையறை ஆணையர் அவர்களால் உத்திரவிடப்பட்டது. எனவே வார்டு மறுவரையறை ஆணையர் அவர்களின் உத்திரவின்படி வார்டு எண்.10ல் சேர்க்கப்பட்ட வாழவிளையில் உள்ள க.எண். 9/1 முதல் 30A வரையிலான 28 வீடுகளை வார்டு எண்.7–ல்

சேர்க்கப்பட்டு அவைகளை வார்டு எண்.10–ல் இருந்து நீக்கம் செய்யப்பட்டது. அதன்படி மேலும் வார்டு மறுவரையறை படிவம் 1D, 2D மற்றும் வரைபடம் ஆகியவற்றிலும் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான திருத்திய இறுதி கருத்துரு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1552/2017/ற்றி.பி.ஐ)

**மன்றத் தீர்மானம் எண். 1198**

பார்வையிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

2)இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN74-W 0436 வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்த கடைசி நாள் 13–02–2018– ஆகும்.

எனவே மேற்படி ஈப்பு வாகனத்திற்கு இன்சூரன்ஸ் புதுப்பித்தல் கட்டணம் ரூ.9369/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி, தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2897/2007/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 1199**

அனுமதி வழங்கப்பட்டது.

3) பத்மனாபபுரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 இயற்றப்பட்டு அதனை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்காக திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக இவ்வலுவலக 31–08–2017–ம் தியதிய ந.க.எண். 327/2017/அ2 எண்ணுள்ள கடிதத்தின்படி அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் தனது 28–09–2017–ம் தியதிய ந.க.எண்.13142–4/2017/தி3 எண்ணுள்ள கடிதத்தில் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு ஒப்புதல் அளித்து அதனை செயல்படுத்திட அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே அதனை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என கேட்டு தினதந்தி நாளிதழில் 14–12–2017 மற்றும் 22–12–2017 தேதிகளில் விளம்பரம் செய்யப்பட்டது.

சுமார் 50 தினங்கள் கடந்த பின்னரும் இதுநாள் வரை பொது மக்களிடத்திலிருந்து எந்த வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை.

எனவே பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016–யினை உறுதி செய்து அதனை நடைமுறைப்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண். 1200**

அனுமதி வழங்கப்பட்டது.

4) இந்நகராட்சியில் நான்கு மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் Liquid Chlorination அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. மேற்கண்ட நான்கு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகளிலும் Liquid Chlorination செய்வதற்கு Liquid Chlorination சப்ளை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.95,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட Liquid Chlorination சப்ளை செய்யும் பணியைச் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 108/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1201</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

5)பத்மனாபபுரம் நகராட்சி எம்.ஜி.ஆர். கலையரங்கம் அருகில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2014–15–ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு சமுதாய கூடம் கட்டும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ளும் பொழுது அடித்தளம் கூடுதலாகவும் ஆழம் அதிகமாகவும் உள்ளதால் மேற்கண்ட மதிப்பீட்டில் கான்கிரீட் பணிகள் Pillar, beam. slab மற்றும் foundation பணிகள் மட்டுமே முடிவடைந்துள்ளது. எனவே கூடுதல் பணியை செய்வதற்கு மாவட்ட ஆட்சியர், நாகர்கோவில் அவர்களால் நடத்தப்பட்ட திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் கூடுதல் பணிகளை (கட்டுமானம், தரைத்தளம், சன்னல், கதவுகள் மற்றும் பூச்சு பணிகளுக்கு) மேற்கொள்ள கூடுதல் நிதிவிடுவிக்குமாறு கேட்டுக்கொண்டபோது கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து தர இயலாது என்றும், மேற்கண்ட பணிகளை நகராட்சி பொது நிதியில் முடித்து உடன் முடிவறிக்கை கொடுக்குமாறும் தெரிவித்தார்கள். எனவே மேற்கண்ட பணிகளில் செங்கல் கட்டுமானம், தரைத்தளம் மற்றும் பூச்சு பணிகளுக்கு மட்டும் மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலையின் மதிப்பீட்டிற்கு அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 98/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1202</u>**

அனுமதி வழங்கப்பட்டது

ஒப்பம்/–
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.